★ ★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

# The EELANADU

மலர்: 20 கார்த்திகை 1 ஜுல்ஹஜ் 15 இதழ்: 277
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 17-11-78

Duplicating
ஆங்கிலத்திலும் தமிழிலும்
Notes, கேள்விப்பத்திரங்கள், குறிப்புகள் முதலியன CYCLO-STYLE செய்யவும் போட்டோஸ்டாட் பிரதிகளுக்கும்
சுப்பகனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

UNIVERSITY OF SRI LANKA ... RECEIVED 1978 -11- ... PERIODICALS DIVISION LIBRARY

## அதிர்ஷ்டச் சிறுமி!

[கொழும்பு]

விமான விபத்தில் 12 வயதுச் சிறுமி ஒருவரே சிறு சிராய்ப்புக் காயம் கூட இல்லாமல் உயிர் தப்பியுள்ளார்.

இச்சிறுமியின் தந்தை, தாய், சகோதரன் ஆகியோர் விபத்தில் பலியாகினர். (இ)

### கட்டுநாயக்கா அருகே நேற்றுமுன்தினம் நிகழ்ந்த பயங்கரம்

# கோர விமான விபத்தில் 201 பேர் பலி! 60 பேர் காயம்!

## பிரதமர், அமைச்சர்கள் ஸ்தலத்துக்குவிஜயம்

(நமது கொழும்பு நிருபர்)

**249 ஹஜ்யாத்திரிகர்களுடன் மக்காவிலிருந்து இந்தோனேஷியா சென்றுகொண்டிருந்த ''டிசி-8'' விமானம் கட்டுநாயக்காவுக்கு அருகில் விழுந்து நொருங்கியது. இவ்விபத்தில்சுமார் 201 பேர் பலியாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

நேற்று முன்தினம் இரவு சுமார் 11 மணியளவில் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இறங்குவதற்கு சற்று முன்னர் விமான நிலையத்திலிருந்து மூன்றுமைல் தொலைவில் ஆண்டிஅம்பலம வுக்கு அருகில் இசுதாகொடல என்ற இடத்தில் விபத்து இடம்பெற்றது.

இவ்விபத்தில் காயமுற்ற 54 பேர் நீர்கொழும்பு ஆஸ்பத்திரியிலும் 10 பேர் கட்டுநாயக்கா விமானப்படை ஆஸ்பத்திரியிலும் 6 பேர் மிகவும் ஆபத்தான நிலையில் கொழும்பு ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு ஆஸ்பத்திரியில் 23 பேர் வெளிக்காயங்களுக்காக சிகிச்சை பெற்றுள்ளனர். 20 பேர் சத்திரசிகிச்சைக்குள்ளாக்கப்பட்டனர். 5 பேர் ஆஸ்பத்திரியில் மரணமானார்கள் 13 பேர்கொழும்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டனர்.

ஐஸ்லாந்து விமானக்கம்பெனியைச் சேர்ந்த இந்த வாடகை விமானத்தில் 13 விமானச் சிப்பந்திகளும் இருந்தனர். இவர்கள் சகலரும் ஐரோப்பியர்கள் ஆவர்.

### தீயுடன் போராடினர்

விபத்து நடைபெற்றதைக் கேள்வியுற்றதும் ஸ்தலத்திற்கு விரைந்த விமானநிலைய தீயணைப்புப் படையினர் எரிந்து கொண்டிருந்த தீயை அணைக்க நீண்டநேரமாகப் போராடினர் என்றும் அவர்களின் தீவிர முயற்சியினலேயே பல உயிர்களைக் காப்பாற்றமுடிந்ததென்றும் ஸ்தலத்திற்கு விஜயம் செய்த நமது நிருபர் தெரிவித்தார்.

### சடலங்கள் சிதறிக் கிடக்கின்றன

விமானம் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளது என்றும் பலியானவர்களின் சடலங்கள் துண்டம் துண்டமாக ஸ்தலத்தில் சிதறிக்கிடந்தன என்றும் நமது நிருபர் மேலும் தெரிவிக்கிறார்.

### பிரதமரும் அமைச்சர்களும் நேரில் விஜயம்

பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா போக்குவரத்து அமைச்சர் ஜனப் எம். எச். முகம்மட், வெளிநாட்டமைச்சர் ஜனப் ஏ.ஸி.எஸ் ஹமீத், சபா

(6-ம் பக்கம் பார்க்க)

## தேசிய துக்கம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான விபத்தில் உயிர் துறந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் சகல அரசாங்க, கூட்டுத்தாபன காரியாலயங்களிலும் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் என்று தேசிய துக்கதினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பணிப்பின் பேரிலேயே தேசியக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட உள்ளன.

இந்தோனேஷிய ஹஜ்யாத்திரீகர்களின்துர்மரணம் குறித்து இலங்கை ஜனதிபதி திரு. ஜே ஆர் ஜயவர்த்தன இந்தோனேஷிய ஜனதிபதிக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்து செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

## அமிர் அதிர்ச்சி

(கொழும்பு)

புனித ஹஜ்யாத்திரை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பும் வழியில் இஸ்லாமிய சகோதரர்கள் பிரயாணம் செய்த விமானம் விபத்துக்குள்ளாகி 200 பேருக்கு மேல் பலியான செய்தி கேட்டு அதிர்ச்சிக்குள்ளானேன்.

இலங்கையில் இம்மாதிரியாக நடைபெற்ற இரண்டாவது துர்ப்பாக்கிய சம்பவம் இதுவாகும். தமிழ்ப்பேசும்மக்கள் சார்பிலும் என் சார்பிலும் இந்தோனேஷிய ஜனதிபதிக்கும் மக்களுக்கும் இறந்தவர்களின் உறவி

(6-ம் பக்கம் பார்க்க)

# தமிழர் ஒற்றுமையை சிதறடிக்கும் சதிக்கு இரையாகாதீர்!

## கட்டுக்கோப்பாக உழைக்க முன்வாரீர்

### இளைஞர்களுக்கு 'அமிர்' அழைப்பு

[கொழும்பு]

''தமிழ் மண்ணைக் காக்கும் பணியில் ஈடுபட கட்டுக்கோப்பான அமைப்பின் கீழ் உழைக்க முன்வருமாறு தமிழ் இளைஞர்களை விரைவில் அழைக்கவிருக்கிறோம். இந்நிலைக்குத் தயாராகும் பணியில் தமிழ் இளைஞர் பேரவை செயற்படும் என நம்புகிறேன்''

இவ்வாறு தமிழர்விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகமும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு ஏ அமிர்தலிங்கம் பத்திரிகைகளுக்கு நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

தமிழினத்தின் ஒற்றுமையைச் சிதறடிக்க மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட சதிக்கு இரையாகிவிடக்கூடாதென திரு. அமிர்தலிங்கம் இவ்வறிக்கையில வலியுறுத்தியுள்ளார்.

வெளிநாட்டார் ஆதரவு பெற மத்தியகுழு நிறுவப்படும் என்ற தகவலையும் அவர் வெளியிட்டார்.

இவ்வறிக்கையில் திரு. அமிர்தலிங்கம் மேலும் கூறியிருப்பதாவது:

''நான் வெளிநாடுகளில் மேற்கொண்ட 9 வார விஜயம் பற்றி நேற்று நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணிப் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் விளக்கிக் கூறினேன்

''கூட்டணிக்கும் அரசாங்கத்திற்கும் உள்ள உறவுபற்றி பல செய்திகள் வெளியாகியது குறித்து இக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

''இச் செய்திகள் பற்றியும் உண்மைநிலை பற்றியும் முழுமையாக ஆராயப்பட்டது.

### எம். பிக்கள் ஒற்றுமை

''தமிழீழ விடுதலை காண்பதற்கும் தமிழ் மண்ணைக் காப்பதற்கும் நமது பாராளுமன்ற உறுப்பினர்கள் தயாராக இருக்கிருர்கள் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

''மன்னர், வவுனியா. திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் தமிழ்மக்களுக்கு நிகழ்ந்த இன்னல்கள் பற்றி அவ்வப் பகுதி உறுப்பினர்கள் விபரமாக விளக்கினர்கள்,

''அவற்றிற்குப் பரிகாரம் காண்பதற்கும் ஆவரங்கால் மாநாட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கும் நம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டுமென ஏகமனதாக குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

''வெளிநாடுகளில நான் எமது இலட்சிய முன்னேற்றத்திற்கு வேண்டி எடுத்த நடவடிக்கைகளை குழுக் கூட்டத்தில் விளக்கிக் கூறினேன்.

''இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலுள்ள தமிழர்களுடனும் தமிழர் ஸ்தாபனங்களுடனும் ஈழத்தமிழர் நிலைபற்றி விளக்கினேன்.

தமிழீழ விடுதலைக்கு முழு ஆதரவும் அளிக்க அவர்கள் ஆயத்தமாக இருக்கிருர்கள்.

''இவர்களின் பணிகளை ஒருமுகப்படுத்தி இயங்கச் செய்வதற்கு ஒரு மத்தியகுழு நிறுவவேண்டுமென்ற அவர்களது கோரிக்கையை எமது பாராளுமன்ற உறுப்பினர் குழு மத்தியசெயற்குழுவின்

(6-ம் பக்கம் பார்க்க)

## பிரேதப் பெட்டிகளுடன் வரும் இரு விமானங்கள்

(கொழும்பு)

விமான விபத்தில் பலியானவர்களின் சடலங்களை எடுத்துச் செல்வதற்கு இந்தோனேஷியாவிலிருந்து இரண்டு விமானங்கள் இன்று இலங்கைக்கு வருகின்றன.

இத்தகவலை போக்குவரத்து அமைச்சர் ஜனப் எம். எச் முகமட் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

பிரேதப் பெட்டிகளுடன் விமானங்கள் இன்று காலை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலயத்தை வந்தடையும். (இ)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

புன்னாலைக்கட்டுவன், புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த கயிலாயபிள்ளை முதலித்தம்பி என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தின் விடயத்தில்

மரணமெய்தியவர்

புன்னாலைக்கட்டுவன் புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த முதலித்தம்பி சிவபாதம்

மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. 20

எதிராக

கயிலாயபிள்ளை முதலித்தம்பி கைம்பெண் சின்னம்மா, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன்.

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும 1979-ம் ஆண்டு தை மாதம் 19-ந் நாளன்று முற்பகல் 9 மணிகு இந்நீதிமன்றததின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முழுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுததப்படுகின்ருர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ரி. ஜெயராசசிங்கம்,
பதிவாளர்.

1978-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25-ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

என்னுல் எழுதப்பட்டது.
செ. இராமலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.
0801

## அறிவித்தல்

புத்தூர், ஆவரங்கால், மார்க்கட் ஒழுங்கையில் வசிக்கும் செல்வி சாந்தநாயகி செல்வவிநாயகம் என்பவர், தமக்குச் சொந்தமான 1471 தொடக்கம் 1474 வரை இலக்கங் கொண்ட நாலு பங்குகளுக்குரிய 62ம் இலக்கங் கொண்ட பங்குப் பத்திரத்தை இழந்து விட்டதாகவும் தமக்குப் பிரதி பங்குப் பத்திரம் வழங்குமாறும் விண்ணப்பித்துள்ளார்.

இன்று தொடக்கம் ஒரு வாரத்திற்குள் தகுந்த காரணம் காட்டி மறுப்புத் தெரிவித்தாலன்றி, இந்த ஸ்தாபனத்தின் இயக்குநர் சபை பிரதி பங்குப்பததிரம் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை இத்தால் அறியத் தருகிறேம்.

இயக்குநர் சபை ஆணைப்படி

சமுத்திரா ட்றேட்ஸ் லிமிட்டெட்
சு. செபஸ்தியாம்பிள்ளை,
நிர்வாக இயக்குநர்.

23/2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 16-11-78.
0803

## பதவி உயர்வு

(பண்டத்தரிப்பு)

சுகாதார இலாகாவில் பிரதி சுகாதார பணிப்பாளராக கடமையாற்றிய டாக்டர் ஏச். ஏ. ஜேசுராசன் இம மாதம் தொடக்கம் சுகாதார சேவைப் பணிப்பாளராக நியமிக்கப் பட்டுள்ளார். இப் பதவிகு தமிழர் ஒருவர் நியமிக்கடபட்டது இதுவே முதல் தடவையாகும். (க)

## பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப் பட்டுள்ளது)

பருத்தித்துறை.

## விளம்பரம்

### பதவி வெற்றிடம்

கிளை முகாமையாளர்

(அமைய அடிப்படை)

மேற்குறிப்பிட்டிருக்கும் பதவி வெற்றிடத்துக்கு கீழ்க் காணும் தகுதியுடைய எமது சங்க எல்லைப் பரப்பிற்குள் வசிக்கும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை எமது தலைமை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது முத்திரை ஒட்டப்பட்ட தமது விலாசமிடப்பட்ட கடித உறையை அனுப்பியோ பெற்றுக்கொள்ளலாம்.

1. வயது: 18க்கும் 45க்கும இடைபட்டிருத்தல் வேண்டும். (இச் சங்கத்தில் சேவையிலிருப்போர்க்கு வயது எல்லை கணிக்கப்படமாட்டாது)
2. கல்வித்தகைமை: ஆறு (6) பாடங்களில் பெறுறுள்ள க. பொ. த. ப. (சாதாரண) சித்தியும், ஒரு வருட கால அனுபவமும்.
3. வதிவுததகைமை: குறைந்தளவு 2 வருடமாவது யாழ்ப்பாண மாவட்ட எல்லைக்குள் வசிப்பவராக இருததல் வேண்டும்.
4. வேதனம்: நாளொன்றிற்கு ரூபா 5-50.
5. விண்ணப்ப முடிவு திகதி: 28-11-78.
6. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் நியமனம் செய்யப்படுவதற்கு முன்பாக ரூபா 1,000/- காசுப் பிணையாகக் கட்டுதல் வேண்டும். அத்துடன் ஒரு வாரகால எல்லைக்குள் ரூபா 5,000/- பெறுமதிக்கான உறுதிப்பிணையும் கட்டுதல் வேண்டு .

அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப்பத்திரங்கள், கல்விச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப் த்திரம்ஆகியவற்றின் பிரதிகளுடன் விண்ணப்பப் பததிரம பதிவுத்தபால் மூலம் ''தலைவர், பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை'' என்ற விலாசத்திற்கு 28-11-78-ந் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பிவைக்கப்படல்வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பும்போது கபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் ''கிளை முகாமையாளர் (அமைய) பதவிக்கான விண்ணப்பம்'' என்று குறப்பிடல் வேண்டும்.

பதிவுத்தபாலில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

தலைவர்.
பருத்தித்துறை
ப. நோ கூ. சங்கம்,
பருத்தித்துறை.

திகதி: 13-11-78.

0804

## பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலனசபை பண்ணிசைப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

ஆரம்ப பிரிவு, கீழ்ப்பிரிவு, மததிய பிரிவு, மேற்பிரிவு என நான்கு பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டி அடுத்த மாதப் 3 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ், இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும் [அ]

## வெள்ளவிளைவு: வலிமேற்கில் பயிர்ச்செய்கை சேதம்

(சங்கானை)

காலபோக கோவாச் செய்கை அண்மையில் பெய்த பெருமழையினுல் வலிகாமம் மேற்குப் பகுதியில் பாதிக்கப் பட்டுள்ளது

இப்பகுதியில் இடப்பட்ட நாற்று மேடைகள் நூற்றிற்கு எண்பதுவீதம் 'மேடை அழுகல்' என்னும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நோயிலிருந்து விடுவிக்க விவசாயிகள் எடுத்த முயற்சி பலனளிக்கவில்லை விவசாய இலாகா பகுதியினரின் போதனைகளும் பயன்தராமையால் அந்த மேடைகளை கைவிட்டு புதிய மேடைகள் போடப்பட்டுள்ளன இதனுல் இப்பகுதி கோவாச் செய்கை சிறிது காலம் பின் தள்ளப்பட்டுளளதாக அறிய வந்துள்ளது.

## கிணறுகளில் வெள்ளநீர்: குடிநீரின்றி மக்கள் அவதி

(சங்கானை)

வடபகுதியில் சங்கானை, சண்டிலிப்பாய், காக்குவில், நந்தாவில், சுதுமலை மற்றும் இடங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு குடிபெயர்ந்த மக்கள் தண்ணீர் தட்டுப்பாட்டால் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர்.

அவர்கள் பாவித்த கிணறுகளில் வெள்ளம் புகுந்தமையே இந்த கஷ்டத்திற்கு முக்கிய காரணமாகும்.

வெள்ளம் வடிந்து மீண்டும் தமது வீடு திரும்பியுள்ள இவர்கள் தமது வீட்டுப் புறங்களில் பிராணிகள் இறந்தும் ஏனைய அழுக்குப் - பொருட்களின் துர்நாற்றங்களையும் தாங்க முடியாது தவிக்கின்றனராம்.

கிணறுகள் இறைக்க முடியாத நிலையில் இருப்பதால் குடிநீர் எடுக்க வேறு இடங்களை நாடுகின்றனர். நீரை சுத்தம் செய்ய இருவதற்கு ரசாயனப் பொருளான 'குளோறின்' போன்றவற்றை இவர்களுக்கு விநியோகிப்பதறகு சுகாதார பகுதியினர் நேரில் பார்வையிட்டு ஆவன செய்ய அக்கறையில்லையெனவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி பகுதிகளில் பாதிக்கப்பட்டோர் பற்றிய விபரம் திரட்டுவதில் சமூகசேவைப் பகுதியினரும் நாட்டம் காட்டவில்லையாம். (உ)

## நாவற்குழியில் விவசாயப்பண்ணை

### சாவகச்சேரி எம். பி. நடவடிக்கை

(மட்டுவில்)

தென்மராட்சிப்பகுதியின் இரண்டாவது பெரிய விவசாயப் பண்ணை நாவற்குளியில் அமையும். இதற்கான நடவடிக்கையை சாவகச்சேரி எம் பி. திரு வ ந. நவரத்தினம் மேற்கொண்டுள்ளார்,

மட்டுவில் மகாவித்தியாலயத்தில் முதலாவது விவசாயப் பண்ணை அமைந்துள்ளது. இதன் காலபோக விதைப்பு வேலைகளை, வித்தியாலய ஆசிரியர்கள், அதிபர், மாணவர்களே, உழவு இயந்திர உதவியையோ, மாடுகளின் உதவியையோ எதிர்பாராமல் செய்து முடித்தனர்.

இரண்டாவது விவசாயப் பண்ணை நாவற்குழி மகாவித்தியாலயத்தில் அமையும். கடந்த ஆண்டு நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் திரு ஐ. சுவனத்துரை அங்குள்ள விவசாய ஆசிரியரின் உதவியுடன் நெல்விவசாயத்தை மேற்கொண்டார்.

இதைத்தொடர்ந்து சடந்த மார்ச் மாதம் இப்பாடசாலையில் அறுவடை விழாவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்த அறுவடை விழாவுசகு, வடமாநில வித்தியாதிபதி திரு. ரி. மாணிக்கவாசகர் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு அறுவடைவிழாவை ஆரம்பித்துவைத்தமையும் குறப்பிடத்தக்கது.

தென்மராட்சியில் இரண்டாவது விவசாயப்பண்ணையை நாவற்குழியில் அமைப்பதென சாவகச்சேரி எம். பி. திரு. நவரத்தினமும் கல்வி இலாகாவும் தீர்மானித்துள்ளார். இங்கு தச்சுத் தொழில், உலோகத்தொழில் பயிற்சிநிலையத்தையும் விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் எம். பி திரு. நவரத்தினம் உறுதியளித்துள்ளார்.

## கேள்வி விண்ணப்பம்

### இசுசு லொறி (காப் மொடல்)

புதிய பொடி அடிப்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்ப் படிவத்தையும், கேள்விக் கொத்தையும் 78-12-05ம் திகதிக்குமுன் பெற்று, 78-12-19ம் திகதிக்கு முன்னர் 'பொது முகாமையாளர், வலி கிழக்கு தென்பகுதி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி' என்ற முகவரிக்கு சீலிட்ட தபால் உறையின் இடதுபக்க மேல்மூலையில் 'பொடி அடித்தல்' எனக் குறித்த விண்ணப்பிக்கலாம்.

பொது முகாமையாளர்,
வலி கிழக்கு தெ ப.
ப நோ கூ. சங்கம்,
நீர்வேலி,
1978-11-09 0810


## வரி விளம்பரம்

### தேவை

ஐந்து வருட அனுபவமுள்ள விற்பனையாளர்கள் தேவை. இருபாலாரும் நேரில் விண்ணப்பிக்கவும். க. நாகமுத்து அன் சன், 48-50, பெரிய கடை, யாழ்ப்பாணம். 0791

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரபல ஸ்தாபனத்திற்கு நல்ல அனுபவமும், தேர்ச்சியும், நற்குணமும் உள்ள கணக்காளர் (Accounts Clerk) தேவை. சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 0809 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 0809

யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு பிரபல ஸ்தாபனத்திற்கு நல்ல அனுபவமும், தேர்ச்சியும் நற்குணமும் உள்ள விற்பனையாளர் தேவை. உடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 0808 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 0808

நல்ல நிலையிலுள்ள ஆங்கில பெரிய தட்டச்சு யந்திரம். விண்ணப்பிக்கவும். கே என். நவரத்தினம், 211, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 0802


## மல்லாகம் கிராமசபை

### கேள்வி விளம்பரம் 1979

மல்லாகம் நீதிமன்ற வீதியிலுள்ள ஆட்டிறைச்சிக்கடையில் 01-01-1979 முதல் 31-12-1979 வரையிலான காலப்பகுதிக்கு ஆட்டிறைச்சி வியாபாரம் செய்யும் குத்தகைக்கான கேள்விகள் 29-11-1978-ந் திகதி புதன் கிழமை நண்பகல் 12-00 மணி வரை என்னுல் ஏற்றுக் கொள்ளப்படும.

கேள்விப்பத்திரங்கள் பிணைப்பணமாக ரூபா 50/-ம் கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 10/-ம் செலுத்தி 28-11-1978-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. இதர விபரங்கள் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

க. மகாதேவா,
விசேட ஆணையாளர்,
கிராமசபை,
மல்லாகம்.

கிராமசபை அலுவலகம்,
மல்லாகம்,
15-11-1978. 0805


உங்கள் அபிமான நண்பர்!

"றலி" வந்துவிட்டார்

வடமாகாண மக்கள் பல வருடகாலம் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ''றலி'' பைசிக்கிள், இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளது.

உறுதியானதும், தரமான உதிரிப்பாகங்கள் கொண்டதும், பலகாலம் பாவிப்பிற்கு உத்தரவாதமும் உள்ள

இங்கிலிஷ் "றலி" பைசிக்கிள்

மிகவும் சகாயமான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்:

நியூரோன் எலக்ரிக்கல்ஸ்
141, 143, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7816

ஈழநாடு
The Eelanaadu

## வரிச் சலுகை வரவு-செலவு

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தின் இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகையைச் சரிக்கட்டுவதற்குநிதியமைச்சர்எந்தெந்தப் பொருட்களின் விலையை உயர்த்தப் போகிறாரோ என்று ஏக்கம் கொண்டிருந்தவர்களுக்கு ஆறுதலையும்; விலை அதிகரிக்கும், அதனால் கொள்ளை இலாபம் சம்பாதிக்கலாம் என்ற நம்பிக்கையுடன் கோதுமை மா, சீனி முதலிய பொருட்களைப் பதுக்கியவர்களுக்கு ஏமாற்றத்தையும் கொடுத்திருக்கிறார் நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல்.

கோதுமை மா, சீனி, அரிசி, பெற்றோல், மண்ணெண்ணெ, சிகரட், சாராயம் ஆகிய பொருட்களின் விலைகள் அதிகரிக்குமென்று பரவலாக நாட்டில் வதந்தி நிலவியபோதிலும், நிதியமைச்சர் தமது வரவு-செலவுத்திட்ட உரையில் இப்பொருட்களின் விலைகளில் எந்தவித மாற்றத்தையும் ஏற்படுத்தக்கூடியதாக அறிவிப்பு எதையும் வெளியிடவில்லை.

எதிர்பார்க்கப்பட்டது போல அரசாங்க, உள்ளூராட்சி, கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு வழங்கப்பட்டிருக்கிறது இந்த ஊழியர்களின் மொத்தச் சம்பளத்தில் பத்துச் சத வீதச் சம்பள உயர்வு வழங்கப்படும். ஆனால் குறைந்தபட்சச் சம்பள உயர்வு ஐம்பது ரூபாயாக இருக்கவேண்டும்.

இந்தச் சம்பள உயர்வு, வேலைபார்க்கும் ஊழியருக்கு மகிழ்ச்சியளிக்குமென்பதில் ஐயமில்லை இந்தச் சம்பள உயர்வினால் மேலும் பலர் பங்கீட்டரிசிப் புத்தகங்களை இழக்க நேரிடலாம். சம்பள உயர்வினால் வாழ்க்கைச் செலவு உயர்வுப் பளுவைச் சமாளிக்க முடியுமா என்பது கேள்வி.

அரசாங்க ஊழியரின் படிச் செலவுகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருப்பதுடன், வருடத்தில் பன்னிரண்டாயிரம் ரூபாய் வருமானம் பெறுபவருக்கும் வருமானவரி கிடையாது.

அரசு, அரசு நிறுவனங்கள், கல்வி நிலையங்கள், தொழில்நுட்ப நிலையங்கள் என்பனவற்றுக்கு எவ்வளவு பெரிய தொகை நன்கொடை கொடுத்தாலும் அவற்றுக்கு எவ்வித நன்கொடை வரியும் அறவிடப்படமாட்டாது.

அப்பணம் எப்படிப் பெறப்பட்டது என்பது பற்றியும் எவ்வித கேள்வியும் எழாது.

சேமிப்பை ஊக்குவிப்பதற்காகச் சேமிப்புகட்டடும் முதலீடுகளுக்கான வட்டிகளுக்கும் வரிச் சலுகை.

மொத்தத்தில் நிதியமைச்சர் திரு. ரொனி டி மெல்லின் புதிய வரவு-செலவுத் திட்டம், வரிச் சலுகைகளையே அதிகமாகக் கொண்டிருக்கிறது

வரிப் பளுவைக் குறைப்பது நிதியமைச்சரின் நோக்கம் என்று சொல்லலாம்.

துண்டுவிழும் தொகையை சரிக்கட்டுவதற்கு ஒதுக்கீட்டதிகாரச் சட்டகடனாக 195கோடி ரூபாவை அரசு பெறவிருக்கிறது. வர்த்தகப் பொருள் உதவியாக 220 கோடி ரூபாவையும், திட்டங்களுக்கான உதவிகள், நன்கொடைகளாக 215 கோடி ரூபாவையும் பெறவிருக்கிறது. 802 கோடி ரூபாய் துண்டு விழுந்தாலும் நிதியமைச்சரின் உரையிலிருந்து நடைமுறைச் செலவுகளின்படி 6.4 கோடியே 40 லட்சம் ரூபாய்தான் துண்டு விழும்.

அத்தியாவசியப் பொருட்களின் விலைகளில், புதிய வரவு-செலவுத் திட்டம் மாற்றம் எதையும் செய்யாதிருப்பது மகிழ்ச்சி அளிப்பினும், கஸட் அறிக்கை மூலம் மாறுதல் வரக்கூடாதென்பதே மக்களின் பிரார்த்தனையாகும்.

# சைவமும் புலால் மறுத்தலும்

இறைவனால் படைக்கப்பெற்ற உயிர்களிடத்து கருணை காட்டும் ஆன்மநேய உணர்வு பண்டைத் தமிழருள் சிலரிடம் இருந்துவந்ததென்றாலும் பண்டைக்காலத் தமிழர்கள் புலால் உண்பதை வழக்கமாகவே கொண்டிருந்தனர் எனலாம். மேலும் புலாலுண்ணும் வழக்கத்தை வெறுத்துத் திருவள்ளுவரைத் தவிர வேறெவரும் பாடவில்லை எனலாம். புலால் உண்ணும் வழக்கம் சங்கப் பாடல்களிலேயே குறிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### எதிர்ப்புத் தோன்றிய காலம்

தமிழகத்தில் பௌத்த, சமண சமயங்கள் செல்வாக்குப் பெற்ற காலத்தில்தான் புலால் உண்ணும் வழக்கத்திற்குக் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. இதற்கு முன்பு யாகத்தில் ஆடுகளைப் பலியிட்டு அந்தணர்களும் உண்டனர் என அறியக்கிடக்கின்றது. இவ்வழக்கு ஆரியரின் வருகையால் ஏற்பட்ட வழக்காகும், தெய்வப்புலவர் திருவள்ளுவநாயனாரும் தமது திருமறையில் புலால் மறுத்தல் என்னும் அதிகாரத்துள் புலாலுணவை மறுத்தும் வெறுத்தும் பாடுகின்றார். அவரே "அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர்செகுத்து உண்ணாமை நன்று" என்னும் குறட்பாவில் வேள்வியில் உயி

**வெள்ளிவிருந்து - 10**

ர்க்கொலை புரிந்து அந்தணர்கள் உண்பதைக் கண்டிக்கின்றார். இதையே தாயுமான சுவாமிகளும் "கொல்லாவிரதமொன்று கொண்டவரே நல்லோர் மற்று அல்லாதார் யாரோஅறியேன் பராபரமே" என்று பாடுகின்றார் எனவே கொல்லா விரதத்தை மேற்கொள்ளும் மக்களே நல்லோர் என்றும். அல்லாதவரை "யாரோ அறியேன்" என்றும் பேசுகின்றார்.

வள்ளுவர் புலால் உண்ணும் வழக்கத்தை மனிதசமுதாயத்திலிருந்து ஒழித்துவிட விரும்பி அருளாளர்க்கே அழுத்தமாகப் போதித்துள்ளார்.

"அருளாட்சி, ஊன் உண்பவர்க்கு இல்லை" என்பது வள்ளுவர் வாக்காகும். மேலும் "தன் ஊன்பெருக்கத்திற்குத் தான் பிறிதூன் உண்பான் எங்ஙனம் ஆளும் அருள்" என்றும், "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என்று வரும் குறட்பாக்கள் மூலம் மெய்யுணர்வு பெற விரும்பியவர்களுக்கே புலாலுண்ணாமையின் அவசியத்தைபோதித்தது புலனாகும்

### தெய்வங்களின் பெயரால்...

தெய்வங்களின் பெயரால் உயிர்களைக்கொல்லும் கொடிய வழக்கம் சங்ககாலம்தொட்டே தமிழர்களிடையே இருந்து வந்திருக்கின்றது. உயிர்க்கொலையை வெறுத்து ஊனுணவை மறுத்துப் பாடிய வள்ளுவர் கூட பலியிடும் வழக்கத்தைக் கண்டிக்கவில்லை என்று கூறலாம், இன்னும் சில கோவில்களில் பலியிடும் வழக்கம் வழக்கிலுள்ளதைக் காணலாம். இவ்வழக்கு இன்றைய நாகரிக சைவத் தமிழ்மக்கள் மத்தியிலிருந்து விலகவேண்டும்.

பண்ணிசைக் கலாநிதி
எஸ். கே. சிவபாலன்

### வள்ளுவர் நெறியே சைவம்

உயிர்களைப் பலியிடும் வழக்கம் ஒருசில மக்களிடையே மூடநம்பிக்கை காரணமாகவே நிலவிவந்தது என்றும் கூறலாம் வள்ளுவர் குறிக்கும் நெறியே சைவமாகும் தெய்வங்களைத் திருப்திப்படுத்த உயிர்களைப் பலியிடுதல் தேவையென்று போதிக்கும் மதவாதிகளும் காலத்திற்குக் காலம் இருந்துவந்திருக்கின்றனர், இப்பிரச்சினை உயிர்க்குலத்தில் ஒருமைப்பாட்டுப் பிரச்சினை என்பது எல்லோராலும் உணரப்பட்ட அன்றே மனிதன் இறைவனை உணர்ந்த நாளாகும்.

மனிதனை மனிதன் சுரண்டுவதும். ஒருநாட்டினரை இன்னொரு நாட்டினர் அடிமைப்படுத்துவதும் ஒருசாதியினரை அடிமைப்படுத்தி இன்னோர் சாதியினர் ஆதிக்கம் செலுத்துவதும், ஒருமதத்தினரை மற்றொரு மதத்தினர் பகைப்பதும் உயிர்களனைத்தும் பரம்பொருளின் வடிவங்கள் என்ற உண்மையை உணராமல் இருப்பதன் விளைவுகளே என்று கூறலாம். எனவே ஆரியரின் தொடர்பால் ஏற்பட்ட இந்த உயிர்ப்பலிவழக்கினை ஒழிக்கச் சைவர்கள் பாவசங்கற்பம் கொள்வோமாக.

(வளரும்)

## ஆசிரியருக்குக் கடிதம்:

# "நீதியான முறையில் நிவாரணம் வழங்குக"

கடந்த வருடத்தில் ஏற்பட்ட இனக்கலவரத்தினாலும், சென்ற மாதம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினாலும் ஏற்பட்ட சேதத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கம் சரியான நீதியான முறையில் பாரபட்சமின்றிப் பணத்தை ஒதுக்கீடு செய்துள்ளது அப்பணத்தை வழங்குவதற்கு கிராமசேவையாளர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும் என்ற நியதி ஒன்றுள்ளது அந்தக் கடமைகளை கிராமசேவையாளர்கள் சரியான முறைப்படி செயற்படுத்தவேண்டும்

சென்ற வருட நடுப்பகுதியில் ஏற்பட்ட இனக்கலவரத்தின்போது உண்மையிலேயே பாதிக்கப்பட்டு உடுபிடவைகள், வீடுவாசல், சொத்துச் சுதந்திரம் அத்தனையையும் இழந்து அடி உதை வாங்கி உண்ணக்கூட உணவின்றி அல்லற்பட்டு அவதியுற்று வந்தவர்களுக்குப் பணத்தை வழங்கும்படி அரசாங்கம் பலகோடி ரூபாவை ஒதுக்கியது ஆனால் மேலே குறிப்பிட்டவைகளுக்கு எதிர்மாறாக அப்பணம் வழங்கப்பட்டதை யாவரும் அறிவார்கள்.

அதே போல இப் பணத்தையும் விணாக செலுத்தப்படாமல் சுகளுக்கிணங்க வழங்காத சாதி சமய பாகுபாடு இன்றி உண்மையிலேயே பாதிக்கப்பட்டு அல்லற்படும் குடும்பங்களுக்கு நல்ல முறையில் வழங்க வேண்டும்.

இதனால் பலகோடி ரூபா அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. அப்படியிருந்தும் அரசாங்கம் பொதுமக்கள் கஷ்டம் அடையாதவகையில் தமது கடமையைச்செய்து வருகின்றது அதே சமயத்தில் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் அரசாங்கத்தைத் தூற்றாமல் இருக்க சமூகசேவைப் பகுதியினரும், உயர் அதிகாரிகளும் அரசாங்க அதிபரும் நேரடி நடவடிக்கைமூலம் பணத்தை வழங்குமாறு மிகத்தாழ்மையுடன் வேண்டுகின்றேன்.

த. பரமசிவம்
ஆனந்தன்வடலிவீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

## யாழ். தொழில் நுட்பக் கல்லூரி

# பயிற்சி நெறி நிறுத்தம்; வணிக மாணவர் ஆட்சேபம்

(புலோலி)

யாழ் பல் தொழில் நுட்பக் கல்லூரியில் தொழில் கற்கைகளிலான தேசிய தகுதித்தேர்வுப் பகல்நேர இருவருடப் பயிற்சி நெறி நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது, இதற்கு யாழ். பல் தொழில் நுட்பக் கல்லூரி வணிக மாணவ மன்றம் பலத்த ஆட்சேபம் தெரிவித்து உள்ளது.

பகல் நேர தொழில் கற்கைகளிலான தேசிய தகுதித் தேர்வுக்கான இருவருடப் பயிற்சிநெறி கண்டி, காலி, பதுளை ஆகிய இடங்களில் உள்ள பல் தொழில் நுட்பக் கல்லூரிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அத்துடன் புதிதாக மாணவர்களும் இப்பயிற்சி நெறிக்கு அனுமதிக்கப்படுமுள்ளனர்.

ஆனால் யாழ் பல்தொழில் நுட்பக் கல்லூரியில் இப்பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படாமல் இருப்பதால் தமிழ் மாணவர்கள் பெரிதும் பாதிப்பும் அதிருப்தியும் அடைந்துள்ளனர். இலங்கையில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரிகளில் யாழ் பல தொழில் நுட்பக் கல்லூரியிலேயே தமிழ் மூலம் பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து மீண்டும் இப் பயிற்சி நெறியினை ஆரம்பிக்குமாறு கல்வி அமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்தினவிடம் வணிக மாணவ மன்றச் செயலாளர் திரு ஏ. என். எஸ். திருச்செல்வம் கோரியுள்ளார். (உ)

## தடைநீக்கம்

(நோண்டாவில்)

யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் தடை விதிக்கப்பட்ட இந்த மாணவ மன்றத்திற்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அசைகள் துக்கத்தை அபிவிருத்திசெய்கின்றன ஆதலால் திருப்தியைக் கொள்.
—ஸ்ரீ சுவாமி சிவானந்த சரஸ்வதி.

## இன்றைய இராசிப்பலன்

கார்த். மாதம் 1-ந் திகதி வெள்ளிக்கிழமை (17-11-78)

**மேடம்:**— அதிர்ஷ்டகரமான தினம். எத்தொழிலைச் செய்தாலும் அதன் மூலம் தகுந்த வருமானம் கிடைக்கும், பெரியோர் ஆதரவும் கிடைக்கும்.

**இடபம்:**— மனதில் விரக்தி மனப்பான்மை தென்படும், பூமிப் பிணக்குகளின் மூலம் வழக்கு விவகாரங்களிலும் மாட்டிக்கொள்ள நேரிடும், நிதானம் விரும்பத்தக்கது

**மிதுனம்:**— அதிக சிந்தனை அமைதியைக் கெடுக்கும், புதிய கோணத்தில் இருந்து தாக்குதல் ஏற்படும், விழிப்புடன் இருக்கவும்.

**கடகம்:**— கடமையாற்றுமிடத்தில் சிறப்பான இடம் கிடைக்கும், வசீகரப் பேச்சின் மூலம் காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள், நல்ல நாள்.

**சிங்கம்:**— வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டும், எதிலும் தாக்கமனப்பான்மை உருவாகும், விவசாயிகளாயின் ஏமாற்றத்திற்கிடமுண்டு.

**கன்னி:**— வசதிகள் பெருகும், வரவிலும் திருப்தியுண்டு. மாதுருவழி ஆதரவும் கிடைக்கும், மகிழ்ச்சிகரமான தினம்.

**துலாம்:**— அதிஷ்டகரமான தினம், மனைவாழ்வில் மகிழ்ச்சி தென்படும், புத்திரரால் புகழுமுண்டு, சுபதினம்.

**விருச்சிகம்:**— ஏமாற்றத்தின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள், தொழில் புரியும் இடத்தில் சூழ்ச்சிகள் உருவாகும். பொறுமை வேண்டும்.

**தனுசு:**— பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர், குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும், பொன்னாள்.

**மகரம்:**— விபத்துக் கிடமேற்படும், எதிலும் நிதானத்துடன் நடந்துகொள்ளவும். தொழில்துறையில் கவனம் செலுத்தவும்.

**கும்பம்:**— தாம்பத்திய வாழ்வில் ஒற்றுமைக்கிடமுண்டு. பொருள் வரவிற்கிடமுண்டு. பெரியோர் ஆதரவும் உண்டு.

**மீனம்:** பயன் தரும் பிரயாணமொன்றும் மேற்கொள்ளப்படலாம், வெளியிடத் தொடர்புகள் பெருகும், தொழில்துறையில் இடமாற்றத்திற்கிடமுண்டு

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## ரூ. 81,000 லாபம்

(புலோலி)

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சென்ற வருட ஐந்தொகையின்படி இச்சங்கத்திற்கு 81,000 ரூபா லாபம் கிடைத்துள்ளது.

அண்மையில் நடந்து முடிந்த ஐந்தொகையிலேயே 81,000 ரூபா லாபம் ஏற்பட்டுள்ளதாக இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் திரு. சதாசிவம் தெரிவித்துள்ளார். (கி)



சிக்மகளூர் வெற்றி

# இந்திராவைக் காப்பாற்ருது!

## வழக்குகள் தொடர்ந்து நடைபெறும் என்கிருர் பிரதமர் தேசாய்



புதுடில்லி, நவ 16

சிக்மகளூர் இடைத்தேர்தலில் திருமதி இந்திர காந்திக்கு கிடைத்த வெற்றி அவரது முறையற்ற செயல்களின் விளைவுகளிலிருந்து அவரைக் காப்பாற்ருது.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜிதேசாய் தெவித்துள்ளார்

திருமதி காந்திக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் மீது விசாரணை தொடர்ந்து நடைபெற்று அவர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு. தேசாய் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

### ஜனதிபதி ஆட்சியே சரியான முடிவு

அமைதி குலைந்து ஆட்சி சீர்கேட்டையும் மாநிலங்களில் ஜனதிபதி ஆட்சியை அமுல்



செய்வதைவிட சிறந்த நடவடிக்கை வேறெதுவும் இல்லை. இந்த ரீதியில் பாண்டிச்சேரி மீசோராம ஆகிய யூனியன் பிரதேசங்களில ஜனதிபதி ஆட்சி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது சரியான நடவடிக்கையே (இ)

### 12 ஆயிரம் துறைமுக ஊழியர்கள் வேலைநிறுத்தம்

பம்பாய். நவ 16

பம்பாயிலும் கல்கத்தாவிலும் நேற்று 12 ஆயிரம் துறைமுக ஊழியர் வேலைநிறுத்தத்தில் குதித்ததை அடுத்து ஏற்றுமதி இறக்குமதி வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கபட்டது (இ)

### ராஜினமாவை வாபஸ் பெறுவர்?

புதுடில்லி. நவ. 16

அண்மையில் ராஜினமாச் செய்த இந்திய மத்திய அமைச்சர் திரு. பர்னலாவும் அவருடன் ராஜினமாச் செய்த ஸ்டேட் அமைச்சர் ஒருவரும் இன்று அல்லது நாளை தமது ராஜினமாக்களை வாபஸ் பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

# நம்பிக்கை மோசடியாம்; இமையாணன்வாசிக்குபிணை

(புலோலி)

உடுப்பிட்டி, இமையாணனைச் சேர்ந்த சிவஞானம் பாலசுந்தரம் என்பவர் இரு கார்களை நம்பிக்கை மோசடி செய்ததாக வெவ்வேறான இரு குற்றச்சாட்டுகளால் தொடரப்பட்ட வழக்குகளின் பேரில் 7 500 ரூபா ரொக்கப் பிணையில் அல்லது தலா 15,000 ரூபா உறுதி பிணையில் செல்லுமாறு பருத்தித்துறை நீதிபதி திரு. கெ. ஞானச்சந்திரன் உத்தரவிட்டார்.

இச் சந்தேக நபா அல்வாய் தெற்கு மாலிசந்தியைச் சேர்ந்த இ. மகேந்திரராசா என்பவரது மோட்டார் காரையும், உடுப்பிட்டி இமையாணனைச் சேர்ந்த க. தேவமனேகரன் என்பவருக்குச் சொந்தமான மோட்டார் காரையும் சட்டவிரோதமான முறையில் தனது பெயருக்கு மாற்றியதாக யாழ். மாவட்ட விசேட குற்றப் புலனய்வுத் துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். (உ)

### பெ. ஆ. சங்கம்

(சங்கானை)

பண்ணுகம் மெய்கண்டான் மகாவித்தியாலய பெற்ருர்-ஆசிரியர் சங்க வருடாந்த விசேட பொதுக்கூட்டம் யாழ் கல்வித்திணைக்கள பொதுநலத் தொடர்பதிகாரி திரு அ. செல்லையா தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: வித்தியாலய அதிபர். திரு. நவரத்தினம், உபதலைவர்: திரு. அ. ஆறுமுகம் (பண்டிதர்), செயலாளர்: திரு. பொ. குலவீரசிங்கம், உபசெயலாளர்: திரு சு. சு. பொன்னம்பலம், பொருளாளர்: திரு. பொ. சுந்தரமூர்த்தி, நிர்வாக உறுப்பினர்கள் எழுபேரி தெரிவாகினர். (உ)

### அமைச்சரிடம் கோரிக்கை

(புலோலி)

பருத்தித்துறை தேர்தற் தொகுதியைச் சேர்ந்த சவனைப்பகுதியில் ஒரு உப அஞ்சல் அலுவலகம் நிறுவப்பட வேண்டுமென இப்பகுதி மக்கள் தபால் தந்தியமைச்சர், பருத்தித்துறை எம். பி ஆகியோரிடம் கோரியுள்ளனர்.

குடிசன நெருக்கம் கூடிய இக்கிராமப்பகுதியில் தமது அஞ்சல் அலுவலக நடவடிக்கைகளை மேற்கொள்ள நீண்டதூரம் செல்லவேண்டியிருப்பதாகவும் இக்குறைபாட்டை நீக்கி இப்பகுதியில் ஒரு உப அஞ்சல் அலுவலகம் நிறுவப்படுவது மிகுந்த நன்மையளிக்கும் என்றும் அக்கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## எண்ணை விலையை குறைந்த விகிதத்தில் அதிகரிக்க யு. எஸ். கோரும்

### அமெ. நிதி அமைச்சர் அரபு நாடுகள் செல்வார்

வாஷிங்டன், நவ. 16

எண்ணை விலையை குறைந்த விகிதத்தில் அதிகரிக்குமாறு அரபுநாடுகளைக் கோருமுகமாக அமெரிக்க நிதி அமைச்சர் திரு. மைக்கல் புளுமெண்டோல எண்ணை உற்பத்தி நாடுகளுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள இருக்கிருர்.

சவூதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு, எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுக்கு திரு. புளுமெண்டால் விஜயம் செய்துபேச்சு நடத்த இருக்கிருர்.

இதேவேளையில், எண்ணை விலையை என்ன விகிதத்தில் உயர்த்துவது என்பதுபற்றி தீர்மானிப்பதற்கு 'ஒப்பெக்' ஸ்தாபன நாடுகள் அடுத்த மாதம் அபுதாபியில் கூடி ஆராய இருக்கின்றன. (இ)

### பெல்ஜியத்தில் டிச. 17-ல் தேர்தல்

புருசெல்ஸ் நவ. 16

பெல்ஜியம் பாராளுமன்றம் நேற்று கலைக்கப்பட்டது.

அடுத்தமாதம் 17ம திகதி இங்கு பொதுத்தேர்தல் நடைபெறும். (இ)

...

### மூளைக்காய்ச்சல்: இதுவரை 829 பேர் பலி!

புதுடில்லி, நவ. 16

மூளைக்காய்ச்சலினுல் உத்தரப் பிரதேசத்தில் மேலும் 27 பேர் பலியாகினர்.

இந்நோய்க்கு உத்தரப் பிரதேசத்தில் மட்டும் இதுவரை 829 பேர் பலியாகியுள்ளனர். (இ)

### 10 ஆயிரம் தான்ஸானியரை காணவில்லை

தார் எஸ்ஸலாம், நவ.16

தான்ஸானியாவின் உகண்டா எல்லையில் வசிக்கும் 10 ஆயிரம் தான்ஸானிய மக்களைக் காணவில்லை என்று தான்ஸானியா தெரிவித்துள்ளது

இதே வேளையில் இந்த எல்லையில் உகண்டா — தன்ஸானிய துருப்புக்களுக்கிடைய தொடர்ந்து சண்டை நடைபெற்று வருகிறது (இ)

### கள் விலை அதிகரிப்பு

(புலோலி)

பருத்தித்துறைகள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் திடீரென கள்ளின் விலையை 60 சதத்தால் அதிகரித்துள்ளது

இதுவரைகாலமும் இச்சங்கத்தின் கிளைகளில் ரூ 1-50 சதத்திற்கு விற்பனைசெய்யப்பட்டுவந்த கள் தற்போது ரூ 80 சதமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (க)

## இந்திய - பாக். இறுதி டெஸ்டில்

### வெங்கட். புறக்கணிப்பு; சட்டமாணவர் புகார்

சென்னை, நவ. 16

தமிழ் நாட்டைச் சேர்ந்த கிரிக்கட் வீரர் திரு எஸ் வெங்கட்ராகவனை காரணம் எதுவுமின்றி காராச்சியில் நடைபெற்றுவரும் இறுதி கிரிக்கட் டெஸ்ட்டின் குழுவில் சேர்க்கவில்லை என்றும் இது கண்டனத்துக்குரியது என்றும் சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் இந்திய கிரிக்கட் சபைக்குப் புகார் செய்துள்ளனர்.

நடைபெற இருக்கும் மேற்கிந்திய - இந்திய கிரிக்கட் டெஸ்ட் தொடரிலும் திரு. வெங்கட்ராகவன் புறக்கணிக்கப்பட்டால் இந்தியக் கோஷ்டிக்கு படுதோல்வியே ஏற்படும் என்றும் இம்மாணவர் இந்திய கிரிக்கட் சபையிடம் தெரிவித்துள்ளனர். (இ)

## பாம்பு கடித்து யுவதி, சிறுமி மரணம்!

(வவனியா)

படுக்கையில் நாகம்தீண்டியதால் இளம் பெண் ஒருவர் மரணமானர். மதவாச்சி விரால் மூறிப்பைச் சேர்ந்த சோமாவதி என்ற 18 வயது இளம்பெண்ணே இவ்வாறு இறந்தவராவார்.

இம்மரணம் குறித்து மரண விசாரணை அதிகாரி ஆர். வி. வில்வராசா விசாரணை நடாத்தினர். விசாரணையின்போது டாக்டர் பாக்கியநாதன், சிறிவர்த்தன ஆகியோர் சாட்சியமளித்தனர்.

0 0 0

சாப்பிட்டுவிட்டு படுத்த சிறுமிக்கு இயமனக வந்தது பாம்பு.

வவனியாவைச் சேர்ந்த இராஜேஸ்வரி மீதியாபரணம் என்ற 12வயதுச் சிறுமியே இவ்வாறு காலயானவராவார்.

இம்மரணம் குறித்து விசாரணை நடாத்திய வவனியா நகர மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். வி வில்வராஜா விபத்து மரணங்கள் எனத் தீர்ப்பளித்தார் (உ)

## கூடுதல் கள் வைத்திருந்தார் 750 ரூபா அபராதம்

(கொடிகாமம்)

சட்டவிரோதமாக அதிகமான கள்ளு வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட எதிரி ஒருவருக்கு சாவகச்சேரி நீதிபதி திரு ஐவன் பெர்ணண்டோ 750 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார்.

மட்டுவில் தெற்கைச்சேர்ந்த தவசி சின்னத்தம்பி என்பவர் 4 கலன் 18 திரும் கள்ளு வைத்திருந்ததாக சாவகச்சேரி மது பரிபாலன இலாகாவிஞரால் இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். (உ)

### பண்ணுகத்திற்கு மின்சாரம்

(சுழிபுரம்)

சுழிபுரம் கிராம சபைப் பகுதியிலுள்ள பண்ணுகம் கிராமத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது

வழக்கம்பரை அம்மன் கோவில் முன்றலில் இருந்து பண்ணுகம் பண்டத்தரிப்பு பிரதான பாதையால் சென்று விசவத்தனை முருகமூர்த்தி கோவில் வரை மின்சாரம் வழங்கப்படவுள்ளது

மின்சாரக் கம்பங்கள் நாட்டும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. அநேகமாக புத்தாண்டு முதல் மின்சாரம் பாவனைக்குக் கொடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது சுழிபுரம் கிராம சபையினரே மின்சாரம் வழங்குவதற்கான வேலைகளை மேற்கொண்டுள்ளனர் (உ)

### தற்கொலை

(வவனியா)

வருத்தத்தின் வேதனையைத் தாங்கமுடியாமல், அதிக காசநோய் மாத்திரையை உட்கொண்டவர் மறு உலகம் போனர்.

இராசேந்திரம் குளத்தைச் சேர்ந்த திலகவதி என்ற 18 வயதுப் பெண்ணே இவ்வாறு காலமானவராகும்

இம்மரணம் குறித்து வவனியா நகர மரணவிசாரணை அதிகாரி ஆர் வில்வராசா விசாரணை நடாத்தினர். விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

Melville Arrow Design

BAYER

விவசாய இரஷாயனப் பொருள் உண்டேன்

பாவித்து நெற்பயிரைத் தாக்கும் இலை தத்தி உட்பட மற்றும் பூச்சிகளையும் கட்டுப்படுத்தவும்

தயாரித்து விநியோகிப்போர்

ஹேகெம் லிமிட்டட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு தொலைபேசி: 93563 - 96331 - 6

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
முத்துராமன்-சுஜாதா
முத்தான முத்தல்லவோ

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
பெண் தெய்வம்

Rio (Jaffna)
Daily 4 Shows
Michael Caine in
KIDNAPPED
(Mistery—Thrill)


## இடமாற்றம்

(நெல்லியடி)

யாழ்ப்பாணக் கூட்டுறவுத் திணைக்களத்தைச் சேர்நத எண்பார்வை உத்தியோகத்தர் திரு. சி. கந்தசாமி ஜனவரி மாதம் தொடக்கம் திருகோணமலைக் கூட்டுறவுத் திணைக்களத்திற்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார்.

இவர், கட்டைவேலி-நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பதில் பொது முகாமையாளராகவும் தற்சமயம் பதவி வகித்துவருகிறார்.

0 0 0

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஆண்கள் பாடசாலை ஆசிரியர் திரு. எஸ். சண்முகசுந்தரம், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளார் இவரின் இடத்திற்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. வேலும்மயிலும் இடமாற்றம் பெற்றுவந்துள்ளார்.


இன்று மட்டும்
ராஜா (யாழ் நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஃ மரிக்கார் ராமதாஸ்
ஃ ஹெலன் குமாரி
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து
ஏமாளிகள்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, 2-30, 6-30 & 9-15
எம். ஜி. ஆர். --- சரோஜா தேவி
நடித்த
திருடாதே [புதிய பிரதி]

வின்ஸர் [யாழ்ப்பாணம்] தினசரி 4 காட்சிகள் போன்: 466
3-வது ஜனத்திரள் வாரம்
ஃ சிவராம் ஃ சந்திரகலா ஃ தனரத்தினம்
நடித்த
அநுராகம்

சிவாஜிகணேசன்
பைலட் பிரேம்நாத்
இலங்கை விஜயம்பற்றிய செய்திப்படம்

வெலிங்டன் [யாழ்ப்பாணம்] தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
20-ந் திகதிவரை
கல்யாணிக்கு கல்யாணம்

லிடோ (யாழ்.நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
எங்கள் தங்க ராஜா

REGAL (Jaffna)
NOW SHOWING
Daily at, 4-30, 7-00&9-30 p.m,
Sidney James, Kenneth Williams
in
'CARRY ON MATRON'
(Color)

மனோகரா [யாழ்நகர்]
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த்
சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

தினசரி 4 காட்சிகள்
ராணி [யாழ். நகர்]
எஸ். எஸ். ஆர்- வீரப்பா
நடித்த
சிவகெங்கைச் சீமை (புதிய பிரதி

சாந்தி (யாழ்.நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி... விஜயா... நெஞ்சிருக்கும்வரை
புதிய பிரதி
18-11-78 காலைக்காட்சி மட்டும் நிதியுதவிக்கானது
Screening Shortly "Blood Money"


### மோசடிக் குற்றச்சாட்டு:

# சந்தேக நபருக்கு ரூ. 2000 பிணை

(யாழ்ப்பாணம்)

தமது அக்காவின் 12 வயது மகளை ஏமாற்றி 6,500 ரூபா பெறுமதியான நகைகளை மோசடிசெய்துவிற்றதாக சந்தேகத்தின்பேரில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதவான் திரு வி. ஜெகசோதி முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்ட நபர் ஒருவர் 2 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியைச் சேர்ந்த கணேசு அல்லது தெய்வேந்திரம் என்ற இந்நபர் தமது அக்கா சொன்னதாக சரவணையிலுள்ள அக்காவின் 12 வயது மகள் குமுதினியிடம் 6,500 ரூபா பெறுமதியான நகைகளை மோசடி செய்து விற்றுவிட்டதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் விசேட குற்றப் புலனாய்வுத்துறைப் பொலிசைச் சேர்ந்த சார்ஜண்ட் ஜி. எஸ். பிள்ளை, கான்ஸ்டபிள் தர்மலிங்கம் ஆகியோர் மேற்படி நபர் யாழ்ப்பாணத்திலும் முல்லைத்தீவிலும் விற்றதாக சொல்லப்படும் நகைகளை மீட்டுள்ளனர்.

சந்தேகநபரை டிசம்பர் மாதம் 13ம் திகதிக்கு நீதிமன்றத்தில் ஆஜராகும்படி நீதவான் உத்தரவிட்டுள்ளார். (உ)

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

தமிழ்பேசும் மக்களை எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்னைகளை பற்றிய கலந்துரையாடல் இம்மாதம் 19-ம் திகதி காலை யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில், சிறுபான்மைச் சமுகங்களும் விகிதாசரப் பிரதிநிதித்துவம் பற்றியும் கலந்துரையாடப்படவிருக்கிறது.

முன்னாள் செனட்டர் பொ. நாகலிங்கம், சட்டத்தரணி மு. சதாசிவரத்தினம், திரு. வ. சிவபாலசிங்கம் உட்பட 15 பேர் இக்கூட்டத்திற்கான அறிவித்தலை வெளியிட்டுள்ளனர். (க)

# ஒரு சைக்கிள் திருட்டினால் 11 சைக்கிள்கள் மீட்பு

## இருவருக்கு நவ. 23வரை றிமாண்ட்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி கந்தசாமி கோவில் திருக்கல்யாண விழாவில் ஒரு சைக்கிளைத் திருடிக்கையும் மெய்யுமாகப் பிடிபட்ட ஒருவர்மூலம் ஏற்கனவே திருட்டுப்போன பதினொரு சைக்கிள்கள் மீட்கப்பட்டன. மேலும் பல சைக்கிள்கள் கிடைக்கலாம் என்றும் நம்பப்படுகிறது.

மாயா அழகு கறுப்பையா அல்லது ராஜசிங்கம் என்பவரும் துரைசிங்கம் மோகனசுந்தரம் என்பவரும் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கிளிநொச்சி பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு சார்ஜன்ட் திரு. கே. நடராஜலிங்கம் தலைமையில் விரைந்த பொலிஸ் கோஷ்டியே மேற்படி 11 சைக்கிளையும் மீட்டுள்ளது. தெகிவளையில் இருந்து ஒரு சைக்கிளும் மீட்கப்படவிருக்கின்றது.

சந்தேக நபர்கள் கிளிநொச்சி நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது இம்மாதம் 23 ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

### மாணவர்கள் பாதிப்பு

(உடுப்பிட்டி)

பருத்தித்துறை இ போ.ச. டிப்போவினால் நடாத்தப்படும் பஸ்சேவை, மழைகாலங்களில் நிறுத்தப்படுவதனால் பாடசாலை பஸ் சேவையை நம்பியிருக்கும் மாணவர்கள் பாடசாலை செல்லமுடியாது பெரும் கஷ்டமடைந்து வருகிறார்கள்.

கப்பூது, தும்பளை, நெல்லண்டை, வராத்துப்பளை, கற்கோவளம் ஆகிய பகுதிகளில் உள்ள பாதைகளில் மழை காலங்களில் பஸ் ஓட முடியாதிருப்பதாகக் காரணங் காட்டியே பாடசாலை பஸ் சேவை நிறுத்தப்பட்டு வருகிறதாம். (க)

### அல்வாயில் மின்விநியோகம்

(புலோலி)

"இதுவரை காலமும் மின்மாற்றி பற்றாக்குறையினால் கிராமங்களுக்கு மின்விநியோகம் செய்வதில் தாமதம் ஏற்பட்டுவந்துள்ளது. மின்மாற்றி பற்றாக்குறை நீங்கியதும் சகல கிராமங்களும் சிறந்த மின் ஒளி பெறும்."

மேற்கண்டவாறு அல்வாயில் மின்விநியோகம் ஆரம்பம் தொடர்பாக விடுத்த செய்தியில் பருத்தித்துறை எம் பி திரு, க துரைரத்தினம் கூறியுள்ளார்.

திரு ஆ கதிரவேல் தலைமையில் நடைபெற்ற இவ் ஆரம்ப விழாவில் உடுப்பிட்டி எம் பி திரு த இராஜலிங்கம் பேசுகையில் கூறியதாவது:

கிராமிய அபிவிருத்திகள் மேலோங்கவேண்டுமாயின் அங்கு மின்சாரவசதி ஏற்படுத்தப்படவேண்டும். கிராமங்களுக்கு மின்சாரவசதி ஏற்படுத்துவதனால் கிராமங்களில் கைத்தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கலாம், இந்த பின்தங்கிய கிராமத்திற்கு மின்வசதிசெய்துகரப்பட்டதுபோல் ஏனைய கிராமங்களுக்கும் மின்சாரவசதிகள் செய்துகொடுக்கப்படவேண்டும். இதனால் கிராம அபிவிருத்தியின் ஊடாக நாட்டு அபிவிருத்தியை ஏற்படுத்தலாம்" என்றார்.

மாவட்ட மின்சார நிர்மாணத்துறைப் பொறியியலாளர் திரு. எஸ் செல்வரத்தினம், மின்விநியோகப் பொறியியலாளர் திரு. எஸ். சிவதாசன் ஆகியோரும் உரையாற்றினர். (உ)

### பரந்தன் மாது கொலை:

# சந்தேகநபர் அடையாளம் காட்டப்பட்டார்

(கிளிநொச்சி)

பரந்தன் வயோதிப மாது கொலை தொடர்பாக நாவலப்பிட்டியில் நகைகளுடன் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சியில் நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்பட்டார். காலஞ்சென்றவரின் உறவினர்களும் அயலவர்களும் அவரை அடையாளம் காட்டினர்.

கடந்த வாரம் பரந்தனில் பூட்டிய வீட்டிற்குள் ஒரு வயோதிபப் பெண்ணின் சடலம் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டதும் வீட்டில் இருந்த நகைகளும் பணமும் வீட்டில் வேலைக்காரனாயிருந்த கணேசுவும் திடீரென மறைந்துவிட்டது தெரிந்ததே.

நாவலப்பிட்டியில் நகைகளுடன் கைதான நடேசு என்பவரே, கணேசு என்ற குறிப்பிட்ட வீட்டின் வேலைக்காரன் என்று விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறும் 23ம் திகதி மீண்டும் கோட்டில் ஆஜர் செய்யுமாறும் கிளிநொச்சி மாஜிஸ்ரேட் உத்தரவிட்டார். [இ]

# சமையல்தாமதம்: அண்ணன் ஏசியதால் தங்கை தற்கொலை

(வவனியா)

சமையல் பிந்திவிட்டதால், அண்ணன் ஏசியதைத் தாங்க முடியாத தங்கை கிருமிநாசினி அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார்.

இச்சம்பவம் வவனியா கொர்தக்காரன் குளத்தில் நடைபெற்றுள்ளது. சி. புனிதவதி என்ற 18 வயது மங்கையே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

மரணவிசாரணை அதிகாரி ஆர். வில்வராசா விசாரணை நடத்தினார். இறந்தவரின் பேரன் சாட்சியமளிக்கையில், சமையல் பிந்தியதால் இறந்தவரின் தமையன், தங்கையை ஏசினாரென்றும், இதையடுத்துக் கவலையுடன் இருந்த புனிதவதி, இரவு கிருமிநாசினியை அருந்தித் தற்கொலை செய்து கொண்டாரென்றும் தெரிவித்தார். தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (உ)

### அல்வாயில் த. கா. வாலிப முன்னணி

(யாழ்ப்பாணம்)

அல்வாய் மேற்கில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிக்கிளை ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இவ்வங்குரார்ப்பணக் கூட்டம் திரு. யோசப்தேவராஜா தலைமையில் நடைபெற்றது.

நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: யோசெப் தேவராஜா, உப-தலைவர்: கே. வேலாயுதம், செயலாளர்: எம் சிவசிதம்பரம். பொருளாளர்: வி. நல்லதம்பி. (உ)

### மாநகரசபைத் தேர்தலில்...

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்ற 19ம் வட்டார ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளரின் தலைமையில் கூடிய மேற்படி கட்சியின் ஆதரவாளர்கள் ஐக்கிய தேசியக்கட்சிக் கிளையை அமைத்தனர். இக்கிளையின் சார்பில் போட்டியிடுவதற்கு 5 பேர் மனுச்செய்துள்ளார்கள். இவர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக இக்கிளையின் தேர்வுக்குழு விரைவில் கூட்டப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

# 232 ஆண்டுகளுக்குப் பின் இலங்கை அரிசி ஏற்றுமதி!

[கொழும்பு]
இலங்கையிலிருந்து 232 ஆண்டுகளுக்குப் பின்னர் நேற்று மாலி நாட்டுக்கு அரிசி ஏற்றுமதி செய்யப் பட்டது

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்ச்சி நேற்றுக் காலை கொழும்புத் துறைமுகத்தில் இடம்பெற் றது.

நேற்றுக் காலை 8-37 மணி சுபவேளையில் கொழும்புத் துறைமுக விஜயா இறங்கு துறையிலிருந்து மாலி நாட்டு க்கு 408,700 தொன் அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டது.

இந்த ஏற்றுமதியை ஒட்டி விசேடமதச் சடங்குகளும் துறைமுகத்தில் இடம் பெற் றது

இந்தோனேஷியாவின் கம் பனி ஒன்றுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பேரில் மாலிநாட்டுக்கு ஏற் றுமதி செய்யும் அரிசியினால் இலங்கைக்கு 3 கோடி ரூபா வுக்கும் அதிகமான வெளி நாட்டுச் செலாவணி கிடைக் கிறது. [இ]

## "கீழைத் தேயத்தின் நெற்களஞ்சியமாகிறது இலங்கை" - லலித் அத்துலத் முதலி

[கொழும்பு]
இலங்கையிலிருந்து வெளி நாட்டுக்கு அரிசி ஏற்றுமதி செய்வதன் மூலம் இலங்கை யில் புதிய சகாப்தம் ஆரம்ப மாகியுள்ளது

இவ்வாறு வர்த்தக, கப்பல் துறை அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி அரிசி ஏற்று மதி தொடர்பாக கொழும் புத்துறைமுகத்தில் நடை பெற்ற வைபவத்தில் பேசு கையில் கூறினார்.

இலங்கை மீண்டும் கீழைத் தேயத்தின் நெற்களஞ்சிய மாக மாறிவருவதையிட்டு நாம மகிழ்ச்சியடைவதோடு இன்றைய நிலைக்கு காரண மாக இருந்த அமரர்கள் திரு. டி. எஸ். சேனநாயக்கா, திரு. சி. பி டி. சில்வா, எம். டி. பண்டா ஆகியோருக்கு

மாலிநாட்டிலிருந்து மேலும் 2,600 தொன் அரிசிக்கு ஆடர் கிடைத்துள்ளது என்றும் விரைவில் அந்த அரிசியையும் ஏற்றுமதி செய்ய நடவடி க்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறினார். [இ]

# 'வரவேற்புகள் அவசியமில்லை!'

## 'அமிர்' வேண்டுகோள்

[கொழும்பு]
"தமிழ் இளைஞர்கள் சிறை யிலிருக்கும்போது எனக்கு எந்தவித வரவேற்பும் அவ சியமில்லை நான் எனது கடை மையை நிறைவேற்றும் பொருட்டே வெளிநாடு சென் றேன். எனக்கு வரவேற்பளிக் கும் எந்த முயற்சியிலும் இறங்கவேண்டாம்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் கூட்டணி ஆதரவாளர்களை உருக்கமாக வேண்டியுள்ளார்.

"நான் யாழ்ப்பாணம் வரும் போதுதமிழ்ப்பகுதி புகையிரத நிலையங்களில்குதூகல வரவேற் பளிக்கவும் யாழ்ப்பாணத்தி லிருந்து காங்கேசன் துறை வரை ஊர்வலமாக அழைத் துச் செல்லவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக செய்தியறிந்து அதிர்ச்சியடைந் தேன். தமிழ்த் தேசிய இனம் இன்று விடுதலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இவ்வேளையில் வரவேற்புக ளும் ஆடம்பர வைபவங்களும் அவசியமற்றது என குறிப்பிட விரும்புகிறேன்" என்றும் திருக் அமிர்தலிங்கம் தெரிவித்துள் ளார். [கெ[

### புயலில் சிக்குண்டு பூநகரி சேர்ந்த

# 6 இந்திய மீனவருக்கும் 23-ந் திகதிவரை றிமாண்ட்!

(கிளிநொச்சி)
இம்மாதம் 4ம் திகதி புயலில் சிக்குண்டு பூநகரிக் கரையை வந்தடைந்த ஆறு இந்திய மீன வர்களும் கிளிநொச்சி நீத வான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு இம்மாதம் 23ம் திகதிவரை விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையில் உள்ள இந்தி யத் தூதரகத்தின் வேண்டுத லின் பேரிலேயே அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளனர்

இதற்கிடையில் 6 மீனவர் களையும்தேடி வந்த இந்திய மீனவர் குழுஒன்று பூநகரிக் கரையை அடைந்து கிளிநொச் சிப் பொலிஸாருடன் தொட ர்புகொண்டனர் என்னும் இந்தியத்தூதரகத்தின் பணிப் புரை இன்றி கிளிநொச்சிப் பொலிஸார் எதுவுமே செய்ய முடியாதநிலையில் தேடிவந்த மீனவர் குழு திரும்பிச் சென் றது.

புயலில் சிக்கிவந்தவர்களை யும் தேடிவந்த மீனவர் குழு வையும் பூநகரி மட்டுவில்நாடு கிராமசேவையாளர் திரு. ம. தயானந்தன் கிளிநொச்சிப் பொலிஸாருடன் தொடர்பு கொள்ளவைத்தார். (இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்தி லுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு நவம்பர் மாதம் 17ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 889, Registered as a Newspaper in SriLanka.

## தமிழர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அபகீகாரத்திற்குச் சமர்ப்பிக் கும்.

### அரசின் பிரசாரம்

"இலங்கையில் தமிழர்களை எதிர்நோக்கும் பிரச்னைகள் யாவும் தீர்க்கப்பட்டுவிட்ட தாக ஐ. தே க. அரசு வெளி நாடுகளில் பொய்ப்பிரசாரம் செய்துவருகிறது இப்பொய்ப் பிரசாரம் மிகுந்த அக்கறை யோடு அரசினால் பரப்பப் படுகிறது.

"நான் வெளிநாட்டுத் தலைவர்கள், பிரதிநிதிகளிடம் உண்மை நிலையை விளக்கி உணர்த்தவேண்டியிருந்தது.

"முன்னைய அரசாங்கம் இழைத்த துன்பத்தைக் களையா மல் ஆட்சிப் பொறுப்பேற்ற ஒரு மாதத்துக்குள்ளேயே இனக்கலவரம் மூண்டது.

"தமிழ் மக்களை அரசு பாதுகாக்கத் தவறியதுடன் அகதிகளாக்கப்பட்ட தமிழ் மக்களுக்கும் புனர்வாழ்வளிக் கத் தவறியது பற்றியும் விளக் கினேன்.

### பயந்து வாழும் நிலை

முன்னெப்போதுமில்லாத வகையில் தமிழர்கள் உயிருக் குப் பயந்தநிலையில் வாழும் நிலை பற்றிக் கூறினேன்.

"வெளிநாட்டு நிறுவனங் களின் செய்தி ஸ்தாபனங்கள் இவ்வாதப் பிரதிவாதங்களை வெளியிட்டிருந்தன"

"நான் வெளிநாடுகளில் இருந்தபோது பாணந்துறை யில் தமிழரின் சில வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாக்கப் பட்டிருக்கின்றன.

### அனுதாபம்

"வடக்கு கிழக்கில் சிங்கள மக்களையும் தெற்கில் தமிழ் மக்களையும் குடியேற்றும் அரசின் திட்டம் பற்றியும் விளக்கினேன்

தமிழரின்தாயகத்தைஅழிக்க மேற்கொள்ளப்படும் இச் செயற்பாடுகள் குறித்து அவர்கள் மிகுந்த அனுதாபம் காட்டினர்.

இங்கு தலைவர்கள் மத்தியில் ஏற்பட்டதான கருத்துவேறு பாடுகள் குறித்தும் அறிகி றேன்.

"இன்றைய நிலையில் தமிழ் மக்களின் ஒற்றுமையைச் சிதறடிக்க திட்டமிட்ட சதி நடக்கிறது.

### தமிழ் இளைஞர்கள்

"கருத்து வேறுபாடுகளுக்கு இளைஞர்கள் இடமளிக்காது மக்கள மனதைக் குழப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடாது தமிழ் இளைஞர்கள் தமிழ் மண்ணைக்காக்கும் பணியில் ஈடுபடுமாறு கேட்டுக்கொள் கிறேன்.

"தமிழ் மண்ணைக்காக்கும் பணியில் ஈடுபடக் கட்டுக் கோப்பான அமைப்பின்கீழ் உழைக்கமுன்வருமாறு விரை வில் அழைக்கவிருக்கிறோம் இதற்குத் தயார்நிலையில் தமிழ் இளைஞர் பேரவை இருக்கும் என நம்புகிறேன்.

"இளைஞர் பேரவைத் தலை வர்கள் காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா ஆகி யோர் சிறையில் இருக்கின்ற இவ்வேளையில். அவர்கள் விட்டுச்சென்ற பணியைச் சிதறடிக்காமல் சதிகளுக்கு இரையாகிவிடாமல் கட்டுக் கோப்புடன் தமிழ் ஈழ விடு தலைக்கு உழைக்குமாறு தமிழினத்தின் எல்லா அங்கங்களையும் கேட்டுக்கொள் கின்றேன்." (ம)

# கோர விமான விபத்தில்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நாயகர் ஜனப் பாக்கீர் மாக் கார் ஆகியோரும் மற்றும் உயர் அதிகாரிகளும் விபத்து நடைபெற்ற இடத்திற்கு நேரில் சென்று பார்வையிட்ட னர்

பொலிஸ், இராணுவ, விமா னப்படை வீரர்கள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுவருகின்ற னர்.

விமானம் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் இறங்கு வதற்கு அனுமதிபெற்றிருந்த தாகவும் இறங்குவதற்கு 26 வினாடிகளுக்கு முன் விபத்து நேர்ந்துளளது.

விமானம் 45 தென்னைமரங் களையும் பல பலாமரங்களை யும் முறித்துக் கொண்டு ஒரு வீட்டின் சமய லறையை இடித்துத் தள்ளிக் கொண்டு பூமியில் விழுந்துள் ளது.

விமானம் பூமியில் விழுந்த தாக்கத்தினால்தான் வெடித்து தீப்பற்றியிருக்கவேண்டும் என்று கருதப்படுகின்றது.

கட்டுநாயக்கா விமான நிலைய தியணைக்கும்படை யினர் விபத்து நடந்த 15 நிமிடங்களுக்கெல்லாம்ஸ்தலத் துக்கு விரைந்து மீட்பு வேலை களை மேற்கொண்டதால் பல பேரை உயிருடன் மீட்க முடிந் துள்ளது.

### தீயணைக்கும் படையின் சேவை

தீயை அணைப்பதற்காக நேற்றுமாலையிலும் கூட தீய ணைக்கும்படையினர் முயன்று கொண்டிருந்தனர். மீட்கப் படாதவர்களின் சடலங்கள் விமானத்தின் மீட்கப்படாத பகுதியில் கிடக்கலாம் என்று கருதப்படுகின்றது.

இறந்து கிடந்தவர்களில் ஒரு கணவனும் மனைவியும் கட்டிப்பிடித்துக்கொண்டு மரணமாகிக் கிடக்கக்காணப் பட்டதாக பார்வையாளர் ஒருவர் கூறினார்.

நீர்கொழும்பு ஆஸ்பத்திரி யில் அனுமதிக்கப்பட்டுள்ள இந்தோனேஷிய இராணுவ பிரிகேடியர் ஒருவர் இலங்கை தீயணைக்கும் படையினர் சேவையைப் பெரிதும் பாராட் டினார்.

5 பேரின் சடலங்களை நேற்று மாலை அதிகாரிகள் அடையா ளம் கண்டிருந்தனர். இதில் ஒன்று விமானத்தின் கப்ட னுடையதாகும்.

### கறுப்புப்பெட்டி கிடைத்தது

விமான விபத்து பற்றிய தகவல்களைப் பதிவுசெய்யும் கறுப்புப்பெட்டி கிடைத்துள் ளது. விமானக் கம்பெனியை அரசாங்கத்தையும் சேர்ந்த அதிகாரிகள் கொண்ட ஏழு பேர் குழுவொன்று இப் பெட்டியிலுள்ள தகவல்களை ஆராயும் என்று தெரிகின்றது.

நீர்கொழும்புக்கு சுமார் 4 மைல் தொலைவில் விபத்து நடந்துள்ளது. ஒரு சிறு குன் றின் மீதுள்ள றப்பர் தோட் டத்தின் வழியாக மரங்களின் மீது ஊராய்ந்தபடி விமானம் கீழே இறங்கியுள்ளது. ஒடு பாதையை உருவாக்கியது போலிருக்கிறது. கட்டு நாயக்கா விமானத்தளத்தை நோக்கியபடி விமானம் வந் திருப்பதாகத் தெரிகின்றது.

இவ் விபத்துபற்றி உடனடி விசாரணை நடத்தும்படி ஜனாதி பதி உத்தரவிட்டிருக்கிறார்.

விமானம் விழுந்த இடத் துக்கு அருகிலேயே ஒரு வெடி கள் செய்யும் தொழிற்சாலை இருக்கின்றது. தெய்வாதீன மாக இத் தொழிற்சாலை தப்பி யுள்ளது.

உயிர்தப்பியவர்களில் பத் திரிகை ஆசிரியரும் அவரது மனைவியும் ஒரு குடும்பமாகும். விமானத்தின் பின்பகுதயில் இருந்ததால் இவர்கள் உயிர் தப்பினார்களாம்.

## வண்ணை ஆனந்தன் மீது பேரவை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)
திரு ந ஆனந்தவிநாயகம் (வண்ணை ஆனந்தன்) தமிழ் இளைஞர் பேரவையின் சகல நடவடிக்கைகளிலிருந்தும் தற்காலிகமாகநீக்கப்பட்டுள் ளார் என தமிழ் இளைஞர் பேரவையின் நிர்வாகச் செய லாளர் திரு யோகநாதன் அறி வித்துள்ளார்.

இயக்கத்தின் கட்டுப் பாட்டை மீறி பத்திரிகைக ளுக்குச் செய்திவெளியிட்ட தாகவும் பொதுச்சபையின் ஏகோபித்தமுடிவை உதாசீனம் செய்தமையாலும் அதற்கான விளக்கம் கோரப்பட்டு பதில் தராமையாலும் திரு ஆனந்த விநாயகம் இயக்கத்தின் சகல நடவடிக்கைகளிலிருந்தும் தற் காலிகமாக நீக்கப்பட்டுள்ளார் என்று திரு யோகநாதன் அறிவித்துள்ளார்.

### பாக், - இந்திய டெஸ்ட்

## இந்தியா 344 பாக். 92 -- 1

கராச்சி நவ. 16
இந்திய - பாக். 3வது இறு திக் கிரிக்கட் டெஸ்டின் 2வது நாளான நேற்று இந் தியா தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கட்டு களையும் இழந்து 344 ஓட்டங் களைப் பெற்றது.

கவாஸ்கர் 119 ஓட்டங்களை யும் கபில்தேவ் 59 ஓட்டங் களையும் பெற்றது குறிப்பிடத் தக்கது.

அடுத்து துடுப்பாடிய பாகிஸ் தான் ஆட்டநேர முடிவின் போது 1 விக்கட் இழப்புக்கு 92 ஓட்டங்களைப் பெற்றது இன்று ஆட்டத்தின் ஓய்வு நாளாகும். (இ)

## அமிர்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

னர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறேன். இறந்த வர்களின் ஆன்மசாந்திக் காகப் பிரார்த்திக்கின் றேன்

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் தமிழர்விடுத லைக் கூட்டணிச் செயல் அதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் விடுத்த ஓர் அறிக்கையில் தெரி வித்துள்ளார். (ம)

## ஜனாசா தொழுகை

நாடு முழுவதிலுள்ள ஜும்மா பள்ளிகளிலும் இஸ் லாமிய வணக்கஸ்தலங்களி லும் விமானவிபத்தில் மரண மானவர்களுக்காக ஜனாசா தொழுகை நடத்தும்படி இஸ்லாமிய இயக்கங்கள் கோரியுள்ளன

இலங்கைவெளிநாட்டமைச் சர் ஜனாப் எம் எச். முகம் மது இந்தோனேஷிய உப ஜனாதிபதி ஜனாப் ஆதம்மாலிக் கடன் தொடர்புகொண்டு நிலைமைபற்றி விளக்கிக் கூறி யுள்ளார். (ம)

## யாழ். முஸ்லீம்லீக் கோரிக்கை

இறந்த ஹஜ்ஜாஜிகளுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக யாழ். முஸ்லிம்கள் தமது வர்த்தகநிறுவனங் களை இன்றுமூடி, ஜும்ஆவில் ஜனாசாத் தொழுகையில் பங்குபெற்றுமறுயாழ முஸ்லீம் லீக் கோரிக்கைவிடுத்துள்ளது.